# முதல் இடைப் பருவத் தேர்வு - 2023

வகுப்பு : 8

## தமிழ்

நேரம் : 1.30 மணி] [மதிப்பெண்கள் : 50

### பகுதி - அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 5X1=5

1. முறையான உடற்பயிற்சியும் சரிவிகித உணவும் ------- ஓட்டிவிடும்.
(அ) பாலனை (ஆ) ஆற்றலை (இ) காலனை (ஈ) நலத்தை
2. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர்
(அ) பாரதிதாசன் (ஆ) தந்தை பெரியார் (இ) திரு.வி.க (ஈ) பெருஞ்சித்திரனார்
3. பயனில்லாத களர் நிலத்திற்கு ஒப்பானவர்கள் -----------.
(அ) வலிமையற்றவர் (ஆ) கல்லாதவர் (இ) ஒழுக்கமற்றவர் (ஈ) அன்பில்லாதவர்
4. ஆய்த எழுத்து பிறக்கும் இடம் : (அ) மார்பு (ஆ) தலை (இ) மூக்கு (ஈ) கழுத்து
5. பள்ளிக்குச் சென்று கல்வி ------- சிறப்பு.
(அ) பயிலுதல் (ஆ) பார்த்தல் (இ) கேட்டல் (ஈ) பாடுதல்

**II கோடிட்ட இடங்களை நிரப்புக.** 2X1=2

6. இயற்கையைப் போற்றுதல் தமிழர் -----------.
7. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ----------.

### பகுதி – ஆ

**II எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 5X2=10

8. செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக்கூடாது?
9. வினைமுற்று எத்தனை வகைப்படும்? அவை யாவை?
10. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?
11. நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது?
12. சான்றோர்க்கு அழகாவது எது?
13. ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?
14. ஓவிய எழுத்து என்றால் என்ன?

### பகுதி - இ

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 3X3=9

15. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன? (அல்லது)
தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்?
16. தமிழ் மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக. (அல்லது)
கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?
17. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக. (அல்லது)
எவையெல்லாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்று சியாட்டல் கூறுகிறார்?

### பகுதி - ஈ

**V. அடிபிறழாமல் எழுதுக.(அனைத்து வினாக்களுக்கும் விடையளி).** 4+2=6

18. "தக்கார்" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.
19. "வாழ்க நிரந்தரம்" எனத் தொடங்கும் தமிழ்மொழி வாழ்த்துப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

### பகுதி - உ

**VI. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி.** 2X4=8

20. கொடுக்கப்பட்டுள்ள தொடர்களின் வகையைக் கண்டறிக.
அ) முக்காலமும் உணர்ந்தவர்கள் நம் முன்னோர் ----
ஆ) பாரதியார் பாடல்களின் இனிமைதான் என்னே! ----
இ) கடமையைச் செய் --------.
ஈ) நீ எத்தனை புத்தகங்களைப் படித்திருக்கிறாய்? ------. (அல்லது)
பள்ளியில் உனது பொறுப்புகள் எவையேனும் நான்கினை எழுதுக.
21. சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடர்களாக்குக.
அ) உலகம் தமிழ்மொழி வாழட்டும் உள்ள வரையிலும்
ஆ) வட்ட எழுத்து எனப்படும் தமிழ் கோடுகளால் வளைந்த அமைந்த எழுத்து
இ) ஏகலை கலையை அம்பு விடும் தமிழ் என்றது
ஈ) கழுத்து பிறக்கும் இடம் உயிர் எழுத்து ஆகும் (அல்லது)
பொருத்தமான பன்மை விகுதியை இணைத்து எழுதுக.
(கள்/ க்கள்/ ங்கள் / ற்கள்)
அ) பக்கம் = ---- ஆ) சொல் = ---- இ) கிழமை = ---- ஈ)பா = ----

### பகுதி – ஊ

**VII. அனைத்து வினாக்களுக்கும் கட்டுரை வடிவில் விடை தருக.** 2x5=10

22. எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக. (அல்லது)
"வெட்டுக்கிளியும் சருகுமானும்" கதையைச் சுருக்கி எழுதுக.
23. விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக (அல்லது)
"நான் விரும்பும் கவிஞர்" என்ற தலைப்பில் கட்டுரை வரைக.



www.Padasalai.Net

CamScanner